பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஆனி 32 (15—7—68) திங்கள் ★ வெளியூர் : ஆடி 1 (16—7—68) செவ்வாய் [இதழ் : 26

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு

ஜூலை இறுதிக்குள் முடிவு

வேலூர், ஜூலை 14—

"தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களின் பட்டியல் இம்மாத இறுதிக்குள் இறுதியாக்கப்பட்டுவிடும்"

என்று சுகாதாரத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா இங்கு தெரிவித்தார்.

(4-ம் பத்தி பார்க்க)

நகராட்சி ஊழியர்கட்கும் பென்ஷன்

ஓராண்டில் செயல்படுத்த அரசு ஆவல்

காஞ்சி மாநாட்டில் முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

முத்தரப்பு மாநாடுகள் மூலம் குறைகளை நீக்கிக்கொள்ள ஆய்வுரை

காஞ்சிபுரம், ஜூலை 14—

அரசு ஊழியர்கட்கு அளிக்கப்படும் ஓய்வுகால ஊதியத்தைப்போன்று, நகராட்சி ஊழியர்கட்கும் அளிக்கும் திட்டத்தை இன்னும் ஓராண்டுக்காலத்திற்குள் செயல்படுத்தத் தமிழக அரசு எண்ணியுள்ளதாக முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

இங்கு நடைபெற்ற மாநில நகராட்சி உயர்நிலை ஊழியர்களின் மாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே அண்ணா அவர்கள் இத்தகவலை அறிவித்தார்கள்.

இந்த மாநாடு, காஞ்சி நகராட்சி உயர்நிலைப் பள்ளித் திடலில் நேற்றும் இன்றும் நடைபெற்றது.

மாநாட்டில் 71 நகராட்சிகளைச் சேர்ந்த இரண்டாயிரம் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

32 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; அவற்றுள், நகராட்சி ஊழியர்கட்கு ஓய்வுகால ஊதியம் (பென்ஷன்) அளிக்கவேண்டும்' என்ற கோரிக்கையும் ஒன்றாகும்.

இன்று மாலை நடந்த மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்.

காஞ்சி நகராட்சிமன்ற மேலாளர் திரு. சுந்தரராசன் அனைவரையும் வரவேற்றார்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, மாநாட்டைத் துவக்கிவைத்தார்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக வராததால், அவருக்குப் பதில் திரு. சி. வி. எம். அண்ணாமலை எம். எல். ஏ. அவர்கள், மாநாட்டு மலரை வெளியிட்டார்.

மாநாட்டையொட்டி இன்று காலை, நகராட்சி ஊழியர்களின் ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது.

பிற்பகல் நிகழ்ச்சியில் நகராட்சி மன்றங்களின் இன்ஸ்பெக்டர் திரு சீனிவாசன், உள்ளமைக் கணக்குத் தணிக்கையாளர் திரு. அசிமுத்தீன், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதி ஆகியோரும் கலந்துகொண்டு பேசினர்.

அண்ணா அவர்கள் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது :—

"நகராட்சி ஊழியர்களின்குறைகளை அரசு நன்கு அறிந்திருக்கிறது. அவர்களின் குறைகளை நீக்குவது அரசின்கடமையாகும்.

நகராட்சி ஊழியர்களுக்கு ஓய்வுகால ஊதியத்தைச் செயல்படுத்த அரசு முடிவு எடுத்துள்ளது; ஆனால் எந்த ஒரு திட்டத்தையும் நிறைவேற்றுமுன், அரசு எச்சரிக்கையாக ஆராய்ந்துதான் செயல்படவேண்டியிருக்கிறது.

நகராட்சி ஊழியர்களின் குறைகளை நீக்க முத்தரப்பு மாநாடுகள் கூட்டி விவாதிப்பது நல்லது. நகராட்சி ஊழியர்களின் பிரதிநிதிகள்--அமைச்சர்--அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் ஒருநாள் குறிப்பிட்டு ஒன்றுகூடி இம்மாதிரி பிரச்சினைகளை விவாதித்துத் தீர்வு காண்பது நல்லது.

இம்மாதிரியான பிரச்சினைகளில் முக்கூட்டு மாநாடு கூட்டுவதன் மூலம் வெற்றி கிடைத்திருக்கிறது.

அண்மையில் வடாற்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர் பிரச்சினை, இம்மாதிரி தொழிலாளர்---முதலாளிகள்--அரசு அதிகாரிகள் ஆகியோர் கூடிப் பேசியதன்மூலம் நல்ல வெற்றியடைந்துள்ளது.

அதிகாரிகள் --- பொதுமக்கள் இடையேயுள்ள உறவும் நல்ல முறையில் இருக்க வேண்டும்; பொதுமக்கள் அதிகாரிகளை அணுகும்போது, அதிகாரிகள் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று--குறைகளைக் கேட்டறிந்து--செய்ய முடிந்தவைகளை உடனுக்குடன் செய்து முடித்தால் அதுதான் சனநாயகத்தின் வெற்றியாகும்.

நகராட்சி ஊழியர்களும் பொதுமக்களுடன் இனிய முறையில் பழக வேண்டும்."

உணவு அமைச்சர் மதியழகன் எச்சரிக்கை பலன் தருகிறது

ஓட்டல் சிற்றுண்டிகள் விலைகள் குறைகின்றன

சென்னை, ஜூலை 14—

ஓட்டல் உரிமையாளர்கட்கு உணவமைச்சர் திரு. மதியழகன் விடுத்த வேண்டுகோளும், எச்சரிக்கையும் உடனடியாகப் பலனளித்திருக்கின்றன.

சென்னை ஓட்டல்களில் சிற்றுண்டிகளின் விலைகளை, ஜூலை 20-ஆம் நாள்முதல் குறைக்க, ஓட்டல் உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர்.

இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் குறைந்திருப்பதைச் சுட்டிக் காட்டி, ஓட்டல் சிற்றுண்டிகளின் விலைகளையும் குறைக்க வேண்டும் என்றும், விலைக் குறைப்பைத் தவிர வேறு எந்தவிதச் சமாதானமும் மக்களுக்குத் திருப்தியளிக்காது என்றும், அண்மையில் அமைச்சர் மதியழகன், ஓட்டல் உரிமையாளரிடையே பேசுகையில் குறிப்பிட்டது நினைவிருக்கலாம்.

சட்டத்தைப் பயன்படுத்த இடந்தராமல், தாங்களே முன்வந்து விலையைக் குறைக்க வேண்டும் என்றும் அவர் ஓட்டல் உரிமையாளர்கட்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

விலை குறைக்கப்படும் பண்டங்கள் :—இட்டிலி 8 காசு; மெது வடை 10 காசு; போண்டா, பஜ்ஜி போன்றவை 20 காசு.

"பிளேட் 35 அல்லது 30 காசுக்கு விற்ற பெரிய ஆடம்பர ஓட்டல்களும் அந்த விலையில் 5 காசு குறைக்கவேண்டும்" என்று ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

"இனிப்புப் பண்டங்கள், காபி, சாப்பாடு ஆகியவற்றின் விலைகள் இப்போதுள்ளது போலவே இருக்கும்; குறைப்பதற்கில்லை" என்று ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

5 பேர்களைப் பலிகொண்ட திருச்சி தீ விபத்து

பாதிக்கப்பட்டோருக்கு மாவட்டக் கழகத்தினர் ஆறுதல்

திருச்சி, ஜூலை 14—

திருச்சி—வரகனேரி பெரியார் நகரில இன்று பிற்பகல் ஏற்பட்ட பயங்கரத தீ வபத்தினால் ஐந்து பேர் வெந்து மாண்டனர்; 250-க்கும் அதிகமான வீடுகள் நாசமடைந்தன.

பலமாக வீசிய காற்று, தீ பரவுவதற்கு உதவியது.

உயிரிழந்த ஐந்து பேர்களில் நால்வர் பெண்களாவர்; ஐந்தாவது நபர் ஒரு சிறுவன்.

6 தீயணைக்கும் எஞ்சின்கள் விரைந்துவந்து, மூன்று மணி நேரம் போராடித் தீயை அணைத்தன.

செய்தி அறிந்ததும் திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தர்மலிங்கம், அவைத் தலைவர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., மற்றும் நகராட்சி உறுப்பினர்கள் விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்துவந்து, பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறி, நிவாரணத்திற்கு ஏற்பாடுகள் செய்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அரிபாஸ்கர், விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டார்; உடனடியாக நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்,

சட்டத்துக்கு விரோதமாக நடக்கும் காங்கிரசார்

தரக்குறைவாகப் பேசுவதில் முன்னணியில் நிற்கின்றனர்

அமைச்சர் மு. கருணாநிதி கண்டனம்

தஞ்சை, ஜூலை 13—

"காங்கிரசின் உயர்மட்டத் தலைவர்களான காமராசர் சுப்பிரமணியம், நிஜலிங்கப்பா ஆகியோர் முதல் கிராம அளவில் பணியாற்றும் காங்கிரசு ஊழியர்கள் வரையில் அனைவரும் பொது மேடையில் ஒழுங்காகப் பேசவேண்டும்; இல்லையெனில், தென்காசியில் கிடைத்த பாடம்தான் மீண்டும் அவர்களுக்குக் கிடைக்கும்"

என்று, பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், இங்கு நடந்த சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தென்காசி வெற்றி வீரர் கதிரவனைப் பாராட்டும் வகையில் நடைபெற்ற இந்தச் சிறப்புக் கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசியதாவது :—

கருத்து வேறுபாட்டைத் தூண்டிவிட்டவர் யார் ?

"தென்காசியில் வெற்றிபெற நிர்வாக இயந்திரத்தைப் பயன்படுத்தியதாகக் காங்கிரசார் குற்றஞ்சாட்டுகிறார்கள்; ஆனால், அங்கு காங்கிரசுதான் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது; இந்து — முஸ்லிம் என்கிற கருத்து மாறுபாட்டைத் தூண்டிவிட்டது; எனவே, தென்காசியில் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற நிர்வாக இயந்திரத்தைப் பயன்படுத்தவேண்டியிருந்தது.

ஆரோக்கியமான மரபுகளை கழகம் வளர்த்து வருகிறது

"தி. மு. கழகம், நல்ல ஆரோக்கியமான மரபுகளை வளர்த்து வருகிறது; 'அரசாங்க வேலை எது—கட்சி வேலை எது— என்று இரண்டையும் பாகுபாடு செய்துவைத்துள்ளோம்.

இதற்கு ஓர் உதாரணம் கூற முடியும். தஞ்சை இரயில் நிலையத்தில் நானும், தோழர் கதிரவனும் இன்று காலை வந்திறங்கினோம்; அங்கிருந்த திறந்த ஜீப் ஒன்றில் ஏறிக் கொள்ளுமாறு எங்களைப் போலீசார் கேட்டுக்கொண்டனர்.

அது அரசாங்கத்தின் ஜீப் ஆனதால், அந்த ஜீப் காரில் ஏற நாங்கள் மறுத்துவிட்டோம்! இரயில் நிலையத்திலிருந்து இராஜா சத்திரத்துக்கு நடந்தே சென்றோம்.

அதுமட்டுமல்ல; நாங்கள் நடந்து சென்றபோது, எங்களுடன் மாவட்டக் கலெக்டரும் நடந்துவந்தார்; என்னுடன் கூடவரவேண்டிய அவசியமில்லை என்றும் தங்கும் விடுதியில் வந்து சந்தித்தால் போதுமானதென்றும் அவரிடம் கூறிவிட்டேன்.

காங்கிரசுத் தலைவர்கள் தங்கள் கட்சியை நிரந்தரமாக ஆட்சி பீடத்தில் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக கடந்த 20 ஆண்டுக் காலமாக அரசாங்க நிர்வாக இயந்திரத்தைப் பயன்படுத்தி வந்தார்கள், அத்தகைய காங்கிரசுத் தலைவர்கள் இன்று 'கறுப்புக் கண்ணாடி' அணிந்துகொண்டு கழகத்தைப்பார்க்கிறார்கள்!

காங்கிரசு மேடைகளில் பேசப்படும் பேச்சுக்கள் மிகவும் தரக்குறைவாகப் போய்விட்டன! கழக அமைச்சர்கள்மீது தனிப்பட்ட முறையில் வசைமாரிகள் பொழியப்படுகின்றன! காங்கிரசுத் தலைவர்களே கூட மட்டமான நடையில் பேசுகிறார்கள்!"

(5-ம் பத்தி தொடர்ச்சி)

மாநிலம் முழுவதிலுமாக மொத்தமுள்ள 1,100 இடங்களுக்கு 7,000 விண்ணப்பங்கள் வந்திருப்பதாக அவர் கூறினார்.

விண்ணப்பித்துக்கொண்ட மாணவர்கட்கு, பேட்டிக்கான கார்டுகள், தொடர்புடைய தேர்வுக் குழுவினால் அனுப்பப்பட்டுவிட்டதாக மேலும் தெரிவித்தார்.

‘உண்மைக்கு மாறான வெறும் குற்றச்சாட்டுகளால் எவ்விதப் பயனும் ஏற்பட இயலாது’

‘கழக அரசின் செயல் முறைகளைக் குறுகிய காலத்தில் ஆய்வுசெய்து குறைகூறுவதேன்?’

‘பொருந்தாக் கூற்றுக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகள் அல்ல’

செய்தியாளர்களிடை முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஜூலை 14—

“தமிழக அரசு செய்துள்ள சாதனைகளை அதன் 15 மாத ஆட்சிக் காலத்துக்குள் வரையறைப்படுத்திக் குறைபட்டுக் கொள்வது பொருத்தமற்றது. அரசாங்கத்தின் செயல்முறைகளை ஆய்வு செய்வதற்கு 15 மாத காலம் மிகவும் குறுகிய காலம். எனவே, சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் தி. மு. கழக அமைச்சரவைமீது கூறுகின்ற குற்றச்சாட்டுக்கள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையன்று!

“தி. மு. கழக அமைச்சரவைமீது குறைபட்டுக் கொள்ளும் சி. சுப்பிரமணியம், உண்மையில் குறை ஏதாவது இருக்குமானால், ‘இன்ன வகையில் குறை உள்ளது’ என்று அதனைக் குறிப்பிட்டுக் கூறவேண்டும்; அப்போதுதான் குறையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கமுடியும், உண்மைக்குப் புறம்பான வெறும் குற்றச்சாட்டுகளால் எவ்விதப் பயனும் ஏற்படாது!

“தி. மு. கழக நிர்வாகத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால்— ‘தமிழகத்தில் ஒரு பொறுப்பான எதிர்க் கட்சி’ என்ற வகையில்— காங்கிரசுக் கட்சி, அந்தக் குறைபாட்டினைக் குறிப்பிட்டு அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவதுதான் கடமை. அப்போதுதான் உண்மையாகவே ஏதேனும் குறைபாடு இருக்குமானால் அதனை விரைந்து நீக்கமுடியும்.

“‘அரசு நிர்வாகத்தின் தினசரி அலுவல்களில் தி. மு. கழகம் தலையிடுகிறது’ என்று சி. சுப்பிரமணியம் கூறுகின்றார்; அது, உண்மைக்குப் புறம்பானது; இத்தகைய குற்றச்சாட்டுக்கள் புதிதல்ல; 15–20 ஆண்டுக்கால காங்கிரசு ஆட்சியின்போதே இதுபோன்ற புகார்கள் கூறப்பட்டுள்ளன.

“‘எந்தக் கட்சிக்கும்— குறிப்பாகத் தி. மு. கழகத்திற்கு— நிர்வாகத்தினர் எவ்விதச் சலுகையும் காட்டக்கூடாது’ என்று அரசு நிர்வாகத்தினருக்குக் கண்டிப்பான கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது!

“ஓர் ஆட்சியின் நல்ல அம்சங்களை எதிர்க் கட்சிகள் ஏற்றுப் பாராட்டும் ஒரு நிலையை இன்னும் நாம் அடையவில்லை; துரதிருஷ்டவசமாக நாம் இன்னும் அந்தப் பக்குவத்தைப் பெறவில்லை”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், பெங்களூரில் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் தெள்ளத் தெளிவுற விளக்கிக் கூறினார். மேலும் அவர், தி. மு. கழகத்தின் கொள்கை—திட்டம் பற்றி சி. சுப்பிரமணியம் கூறியுள்ள பொருத்தமற்ற கூற்றுபற்றி விளக்குகையில் குறிப்பிட்டதாவது:—

“தி. மு. கழகம் இன்னும் தனது திட்டங்களையும், கொள்கைகளையும் உருவாக்கவில்லை என்றும், காங்கிரசு அரசு வகுத்த திட்டங்களையே அமுலாக்கி வருவதாகவும் சி. சுப்பிரமணியம் கூறுகிறார்; அப்படியானால், காங்கிரசுக்கும் கொள்கையோ, திட்டமோ இல்லை என்றுதான் ஆகிறது; தனது கொள்கையான ‘சனநாயக சோஷலிசம்’ என்பது என்ன என்பதைக் காங்கிரசு தெளிவாக விளக்கவில்லை’ என்றே உலகம் முழுவதும் பேசப்படுகிறது; இத்துறையில் அதனுடைய கொள்கைகள் என்ன என்பதை இதுவரையில் விளக்காததைக் கண்டு உலகம் வியப்பில் ஆழ்ந்திருக்கிறது!

“‘காங்கிரசின் கொள்கை சனநாயக சோஷலிசமா என்பதற்குத் திட்டவட்டமான வரைவு வேண்டும்’ என்று காங்கிரசுக்குள்ளேயே ஒரு பகுதியினர், இன்னமும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்; இதன்மூலம், காங்கிரசுக்குக் கொள்கையும் திட்டமும் இல்லை என்பது மெய்ப்பிக்கப்படுகிறது.”

மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன்...!

காவிரி நீர்த்திட்டம் பற்றி அமைச்சர் மு. கருணாநிதி

திருச்சி, ஜூலை 14—

“வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரை சென்னைக்குக் கொண்டுவருவதற்கு ரூ. 18 கோடி செலவில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது; ஆய்வு வேலைகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

“மாநில அரசுகள் ரூ. 5 கோடிக்குமேல் செலவு செய்ய வேண்டுமானால், அதற்கு மத்திய அரசிடம் ஒப்புதல் பெற வேண்டும்; எனவே இந்தத் திட்டத்தை, டெல்லிக்கு அனுப்பிருக்கிறோம்; விரைவில் ஒப்புதல் கிடைத்துவிடும்.

“இன்னும் ஐந்தாண்டுகளில் சென்னைக்குக் காவிரி நீர் கிடைப்பது உறுதி”

என்று பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

சென்னையிலிருந்து கேரளம்—கருநாடகம்— ஆந்திர மாநிலங்களுக்குப் பஸ்கள்

அதிகாரபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளிவரும்

திருச்சி, ஜூலை 14—

“தமிழ்நாட்டிலிருந்து கேரளம், மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்குப் பஸ் விடுவதுபற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன; அதுபற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளிவரும்”

என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

சேலம்— சென்னை இரவு நேரப் பஸ்கள்

“தற்போது, திருச்சிக்கும்–சென்னைக்கும் இடையே இரவு நேர விரைவு பஸ் ஓடுகிறது; இந்தத் திட்டம் வெற்றிபெற்றிருக்கிறது; எனவே, திருச்சிக்கும்–சென்னைக்கும் இடையே மேலும் இரண்டு இரவு நேரப் பஸ்கள் விடுவதுபற்றிப் பரிசீலனை செய்துவருகிறோம்.

“அதேபோல், சென்னைக்கும்–சேலத்திற்கும் இடையே மேலும் இரண்டு இரவு நேரப் பஸ்கள் விடுவதுபற்றியும் ஆலோசனை செய்துவருகிறோம்.”

மனம்போன போக்கில் செயல்படுகின்றனர் காங்கிரசார்!

குழப்பம்—அமைதியின்மைக்கு வித்திடுகின்றனர்

‘சமாதான விரும்பி’கள்போல் பாசாங்கு செய்கின்றனர்!

“காங்கிரசுக்காரர்கள், மதுவிலக்குத் திட்டத்தை அமுலாக்குவது மட்டுமல்ல அவர்களே ‘குடியர்’களாகி, ஒரு படி மேலே சென்றுவிட்டனர்!

“நாட்டில் குழப்பத்தையும், அமைதியின்மையையும் உருவாக்குபவர்களாக அவர்களே செயல்பட்டுவிட்டு, பின்னர், ‘அமைதி குலைந்தது; குழப்பம் விளைகிறது’ என்று ‘சமாதான விரும்பி’கள்போல் கூச்சலிட்டுப் பாசாங்கு செய்கிறார்கள்!

“காந்தியார் மறைவுக்குப்பின், நாட்டிலுள்ள காங்கிரசுக்காரர்கள் ஒவ்வொருவரும், ‘நாங்கள்தான் தலைவர்கள்’ எனக் கூறிக்கொண்டு, தங்கள் மனம்போன போக்கில் செயல்பட முனைந்துவிட்டனர்!

“காந்தியார் கூறிச்சென்ற அறிவுரைகள் அத்தனையையும் அவர்கள் கடைபிடிக்கவில்லை; கதர் திட்டம் நாடு முழுவதிலும் பரவவில்லை; மதுவிலக்குத் திட்டம் எல்லா இடங்களிலும் அமுலாக்கப்படவில்லை!

“இன்றையக் காங்கிரசு ஆட்சிகளில், ‘அரசியல் பாதுஷா’க்கள்தான் அரசோச்சுகின்றனர்!

“தவறான நோக்கமுள்ள காங்கிரசுத் தலைவர்களால், நாட்டிற்கு எந்த நன்மையுமே ஏற்பட முடியாது!”

—ஆச்சாரியா கிருபளானி

(சர்வோதய ஊழியர் கூட்டம் ஒன்றில்)

தொழில் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வு

‘இனியும் இந்தநிலை நீடிக்கக் கூடாது’

மத்திய அரசுக்குக் கருநாடக முதலமைச்சர் கடும் எச்சரிக்கை

பெங்களூர், ஜூலை 15—

“தொழில் வளர்ச்சியில் வட்டார ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இந்த ஏற்றத்தாழ்வுகள் களையப்படவேண்டும்.

“திட்டங்களுக்கு நிதியுதவி அளிப்பதில் மத்திய அரசு இனியும் பாரபட்சம் காட்டுமேயானால், அதை எதிர்த்துக் கருநாடகம், வெளிப்படையாகப் போராடும்”

என்று மைசூர் முதலமைச்சர் வீரேந்திர படடீல், டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பியதும் சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிறார்.

கிரீசுக்குப்புதிய அரசியல் அமைப்பு

ஏதென்சு, ஜூலை 13—

கிரீசுக்குப் புதிய அரசியலமைப்பு ஒன்றை இராணுவ ஆட்சி வெளியிட்டிருக்கிறது; இதன்படி, மன்னரின் அதிகாரங்கள் பெரிதும் கட்டுப்படுத்தப் படுகின்றன. பெயரளவில்தான் அவர் மன்னராக இருப்பார்.

முடியாட்சியின்கீழ் நாடாளுமன்ற சனநாயகம் நீடிக்கும்; ஆனால் மன்னர், தம் விருப்பப்படி தலைமையமைச்சரை நியமிக்க முடியாது.

முக்கியமான முடிவுகள் செய்வதற்கு முன்பு மன்னர், தேசிய ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசிக்க வேண்டும். அந்தக் குழு கூறும் யோசனையையும் மன்னர் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நன்மைக்கும் ஒரு தீங்கு

கெட்ட நோக்கம் கற்பிக்கப்படும் போக்கு

முதலமைச்சர் அண்ணாவின் மனவேதனை

சேலம், ஜூலை 14—

“சில நேரங்களில் நல்லது செய்தால்கூட, அதற்குக் கெட்ட நோக்கம் கற்பிக்கப்படுகிறது; இதனைக் காணும்போது, மிகவும் வேதனையாக இருக்கிறது”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், ரூ. 2-இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சேலம் செயின்ட்பால் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

மாணவர் கடமை

மாணவர்களின் கல்விக்காக அரசு செலவிடும் ஏராளமான தொகைகளைப்பற்றிக் குறிப்பிட்டு, அண்ணா அவர்கள் கேட்டுக்கொண்டதாவது:—

“மாணவர்கள் இதனைக் கடன் போலக் கருதி, அடுத்த தலைமுறையில் மாணவர்களின் நலனுக்காகக் கடனைத் திருப்பித் தரும்வகையில் கடமையாற்றவேண்டும்.”

எல்லையை வலுப்படுத்துகிறது பாகிஸ்தான்!

மேற்குக் காஷ்மீர், மற்றும் சியால்கோட், சாம்ப் பகுதிகளைச் சுற்றிப் பரதைகளை அமைப்பதில் பாகிஸ்தான் இரவு பகலாக ஈடுபட்டிருக்கிறதாம்.

தனது உள்நாட்டு எல்லைப் பகுதிகளுடன் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய பலமான அரண்கள் பலவற்றை இப்பகுதிகளில் பாகிஸ்தான் அமைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

தாஷ்கண்டு ஒப்பந்தப்படி பாகிஸ்தானுக்குத் திருப்பித் தரப்பட்ட பகுதி ஒன்றில் 26 மைல் தூரத்துக்குக் கனரக வாகனங்கள், செல்லும் பாதை ஒன்று அமைக்கப்பட்டிருப்பது இதில் முக்கியமானதாகும்.

தமிழகத்தில் சர்க்கரை ஆலைகளின் நிலை

ஆராய உயர் மட்டக் குழு நியமனம்

புதிய ஆலைகளைத் துவக்க மத்திய அரசின் தடங்கல்-- அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஜூலை 14—

"வருகிற ஆண்டில் தமிழ் நாட்டில் மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளைத் தமிழக அரசு துவக்கும்"

என்று தொழிலமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

தமிழ் நாடு கூட்டுறவு சர்க்கரைத் தொழிற்சாலைகள் கூட்டமைப்பின் ஏழாவது பேரவைக் கூட்டத்தில் அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் செயல்படுவது குறித்துப் பரிசீலனை செய்யும் பொருட்டு உயர்மட்டக் குழு ஒன்றைத் தமிழக அரசு அமைத்திருக்கிறது. இந்த ஆலைகள் செயல்படுவதில் காணப்படும் தவறுகளைத் திருத்தவும், நான்காவது திட்டக் காலத்தில் மாநிலத்தில் மூன்று புதிய கூட்டுறவு ஆலைகளை நிறுவத் திட்டமிடவும் இக்குழு உதவும்.

புதிய சர்க்கரை ஆலைகளைத் துவக்குவதில் அரசு போதுமான அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்றும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் சென்ற ஆண்டு முழு அளவு உற்பத்தியில் ஈடுபடவில்லை என்றும் சம்மேளன தலைவர் திரு. இராசகோபால் நாயுடு கூறியதை அப்படியே ஒப்புக்கொள்ளுவதற்கில்லை. கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு மத்திய அரசு அளித்துள்ள சலுகையை அரசு பயன்படுத்தவில்லை என்பது உண்மையல்ல. இத்துறையின் பிரச்சினைகளில் அரசு ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதால்தான் பரிசீலனைக் குழு நியமித்துள்ளது.

சென்ற ஆண்டு சர்க்கரை ஆலைகள் அனைத்தும் முழு அளவு உற்பத்தியில் ஈடுபடவில்லை. பொதுவாக சென்ற ஆண்டு சர்க்கரைக்கு மோசமான ஆண்டாகும்.

புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை நிறுவத் தகுந்த இடங்களை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மத்திய நிதி நிறுவனம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் முதலீடு செய்யலாகாது என்று மத்திய அரசு அண்மையில் செய்துள்ள முடிவை ஏற்பதற்கில்லை. இதனை மத்திய அரசு கவனத்துக்கு மாநில அரசு கொண்டு செல்கிறது.

புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலையைத் துவக்க சுமார் ரூ. 2 கோடி செலவாகிறது. மத்திய நிதி நிறுவனங்களின் உதவியின்றி இதனை நிறுவுவது என்பது கடினம்.

ஆலைகளுக்கு நிதி வசதி காண்பதற்காக சம்மேளனம் தெரிவித்த யோசனைகள் பரிசீலிக்கப்படும்.

வெளிமார்க்கெட் சர்க்கரைக்கு அரசு நிர்ணயித்துள்ள விலை நியாயமானதேயாகும்."

கண்டாச்சிபுரத்தில் க. அன்பழகன்

பள்ளி இலக்கிய மன்றத்தைத் துவக்கிவைத்தார்

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி. அவர்கள், கண்டாச்சிபுரம் அரசினர் உயர்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்றத்தை 10—7—68 அன்று துவக்கி வைத்தார். விழா மாலை 4-15 மணிக்கு திரு. பி. ஏ. கணேசன் பி.ஏ.பி.டி. தலைமையில் நடைபெற்றது.

பள்ளித் தலைமையாசிரியர் டி. குமாரசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

பேராசிரியர் க. அன்பழகன் பேசும்போது, 'மாணவர்கள் நல்ல முறையில் கல்வி பயின்று காந்தியடிகள், அறிஞர் அண்ணா ஆகியோரைப்போல் நாட்டிற்கு உழைக்கவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

தமிழாசிரியர் பாண்டுரங்கன் நன்றி கூறினர்.

பொதுக்கூட்டம்

இரவு 8-30 மணிக்கு கண்டாச்சிபுரம் தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழாப் பொதுக்கூட்டம், தோழர் இர. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அப்போது பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் நாட்டிற்கு ஆற்றிவரும் தொண்டு பற்றியும் கழகம் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் செய்துவரும் தொண்டினைப்பற்றியும் விளக்கிப் பேசினர்.

கிளைக்கழக அவைத் தலைவர் அ. அருணகிரி, பேராசிரியருக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து இரஷ்யா செல்வார்

மாஸ்கோவில் நடைபெறும் அனைத்து நாட்டுத் திரைப் பட விழாவில் கலந்துகொள்வார்

தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் துவக்க விழாவில் பங்கேற்பார்

சென்னை, ஜூலை 13—

தமிழகச் செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், மாஸ்கோ நகரில் நடைபெறும் அனைத்து நாட்டுத் திரைப்பட விழாவில் கலந்துகொள்ள அடுத்த திங்கள் இரஷ்யாவுக்குப் பயணமாகிறார்.

திரைப் பட விழாவில் திரையிடுவதற்காகச் சிறந்த தமிழ்ப் படங்களையும், உலகத் தமிழ் மாநாட்டு வண்ணப் படத்தையும் அவர் எடுத்துச் செல்வார்.

மேலும் மாஸ்கோவில் நடைபெறும் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் துவக்க விழாவிலும் அவர் கலந்துகொள்வார்.

மற்றும், இரஷ்யாவிலுள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவார்; பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

நாசருக்கு மார்ஷல் டிட்டோ புத்திமதி!

பெல்கிரேடு, ஜூலை 12—

சென்ற போரின்போது இஸ்ரேலிடம் இழந்துவிட நேர்ந்த பகுதிகளை மீட்பதில் பொறுமையாகச் செயல்படும்படி யூகோ அதிபர் டிட்டோ எகிப்து அதிபர் நாசருக்கு அறிவுரை கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

இராணுவ நடவடிக்கையின் ஆபத்து பற்றி நாசரை டிட்டோ எச்சரித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

10 இலட்சம் பேர்களின் நினைவுக் கல்லறை

900 நாட்கள் நடைபெற்ற முற்றுகையில் உயிரிழந்தவர்கள்

வணக்கம் செலுத்தினர் இந்தியக் குடியரசுத் தலைவர்

லெனின்கிராடு, ஜூலை 14—

பாசிசத்திற்கு எதிராகப் போரிட்டு உயிர்நீத்த தியாகிகளுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் வணக்கம் செலுத்தினர்.

900 நாட்கள் நடைபெற்ற ஹிட்லர் பட்டாளத்தின் முற்றுகையின்போது உயிரிழந்த 10 இலட்சம் பேர்கள் புதைக்கப்பட்டுள்ள 'பிஸ்காரிவ்ஸ்கோயே' நினைவுக் கல்லறைக்கு அவரும் அதிகாரிகளும் சென்றனர்.

துக்கம் தோய்ந்த தாயகத்தை உருவகப்படுத்தும் வகையில் காட்சியளிக்கும் ஒரு பெண்ணின் சிலையருகே வீரர்கள் அணிவகுத்து நின்றனர். இராணுவ வாத்தியங்கள் சோக கீதம் இசைத்துக் கொண்டிருந்தன. ஜாகீர்உசேன் நினைவுச் சின்னத்திற்கு மலர் வளையம் சாற்றினர். அதில், 'லெனின் கிராடு நகரைப் பாதுகாக்க வீரத்துடன் போரிட்டு உயிர்நீத்த தியாகிகளின் நினைவாக—இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் உசேனிடமிருந்து' என்று எழுதப்பட்டிருந்தது. அதன்பின், இந்திய—சோவியத் தேசியப் பாடல்கள் வாசிக்கப்பட்டன.

நினைவுப் பொருட் காட்சிசாலையிலுள்ள பல பொருள்களும் விருந்தினர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. அங்கு ஒரு சிறிய 'டெஸ்க்' மாதிரி ஜாகீர் உசேனுக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது.

பார்வையாளர் புத்தகத்தில் அவர் எழுதிய குறிப்பில்,

"இந்தப் புனிதமான இடத்திற்குத் தாம் வந்தது தமது வாழ்வில் மிக உணர்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகும்; இந்த இடம் சோக இடமாகவும், அதே நேரத்தில் மேன்மையான உலகை அமைப்பதற்கு நம்பிக்கையூட்டும் இடமாகவும் உள்ளது நடைபெற்றவை மீண்டும் நடைபெறக்கூடாதென்ற உலக உறுதியை எடுத்துக்காட்டும் இடமாக மிளிர்கிறது"

என்று எழுதியுள்ளார்.

இந்தியாவுக்கு இரஷ்ய டாங்கிகள்!

வாஷிங்டன், ஜூலை 14—

இரஷ்யா பெரும் அளவுக்கு இந்தியாவுக்கு டாங்கிகளை அளிக்க ஒத்துக்கொண்டிருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

இவை, அமெரிக்காவின் பாட்டன் டாங்கிக்கு ஒப்பான 'டி-54' ரக டாங்கிகளாகும்.

ஏற்கனவே இந்தியாவுக்கு அளிக்கப்பட ஒப்பந்தமாகியிருக்கும் பல போர்த் தளவாடங்களுடன் இந்த டாங்கிகளும் இப்பொழுதிருந்து 1970-க்குள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

டெலிவிஷன் நிலையம்

மவுண்ட்ரோடில் நிறுவப்படும்

"சென்னையில் இன்னும் இரண்டு அல்லது மூன்றாண்டுகளில் டெலிவிஷன் நிலையம் ஏற்படும்; இதற்கான இடம் மவுண்ட் ரோடில் உள்ள அரசினர் தோட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது"

என்று மத்திய அரசின் தகவல்—ஒலிபரப்புத் துறை அமைச்சர் திருமதி நந்தினி சத்பதி தெரிவித்தார்.

சென்னை, கல்கத்தா, டில்லி, வானொலி நிலையங்களிலிருந்து வர்த்தக நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திரைப்படக் குழு நிறுவும் பிரச்சினை குறித்துத் திரைப்படத் தொழில் பிரதிநிதிகளுடன் விவாதிப்பதற்காகத் தாம் சென்னை வந்திருப்பதாக அவர் கூறினர்.

ஒரு கோடி ரூபாய்க்கு மோசடி

புதுடில்லி மின்சாரத்துறையில் சாமான்கள் மறைந்த மாயம்

முந்திய நிர்வாகத்தினர் புரிந்த ஊழல்

புதுடில்லி, ஜூலை 13—

புதுடில்லி மின்சார இலாகாவில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்கள், சிமெண்டு மூட்டைகள், மற்றும் உலோகப் பொருள்கள் திருட்டுப்போயிருக்கின்றன!

இத்தகவலை, மின்சாரத் துறையின் புதிய தலைவர் வெளியிட்டார். மேலும் அவர் கூறியிருப்பதாவது :—

"டெல்லி மின்சார நிறுவனத்திற்குச் சொந்தமான 14 கிடங்குகளில் கழிவு செய்யப்பட்ட இயந்திரங்கள், செம்பு-பித்தளை-அலுமினிய கம்பிகள், சிமெண்டு மூட்டைகள் இருந்தன; அவற்றில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் மாயமாய் மறைந்துவிட்டன; 1,700 சிமெண்டு மூட்டைகள் பற்றி எவ்விதக் கணக்கும் இல்லை.

"1,500 சிமெண்டு மூட்டைகள், பாதுகாப்பாக வைக்கப்படாததால் கெட்டுப்போய்விட்டன.

"இதனுல் ஏற்பட்ட இழப்பின் மதிப்பு ஒரு கோடிக்கும் அதிகமாக இருக்கும் எனத் தெரியவருகிறது. எவ்வளவு இழப்பு என்பது பரிசீலனை செய்தபின்னர்தான் தெரியவரும்.

"இத்தகைய மோசடிக்கும் ஊழலுக்கும் முன்பிருந்த நிர்வாகத்தினர்தான் காரணமாவர்."

காந்தியார் கொள்கை காற்றில் பறக்கிறது!

4,000 கள்ளுக் கடைகள் திறப்பதற்குத் திட்டமாம்

'பெவ்டா' மது அருந்த காங்கிரசு அரசு அனுமதி

பம்பாய், ஜூலை 13—

பம்பாயில் பெரும் அளவில் மது விலக்குத் தளர்த்தப்பட்டிருப்பதும், மது அருந்துவதற்குத் தாராள அனுமதி வழங்கப்பட்டு வருவதும் தெரிந்த ஒன்றாகும்.

இவ்வாண்டு நவம்பர் திங்களில் ஏராளமான கள்ளுக் கடைகளைத் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; சுமார் 4,000 கள்ளுக் கடைகள் திறக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுமாம்.

கள்ளுக்கடைகள் திறக்க விரும்புவர்கள், 'லைசென்சு'க்காக மனு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோயில், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் உள்ள இடங்களுக்கு அருகில் கள்ளுக்கடைகள் திறப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

மதுவிலக்குத் தளர்த்தப்படுவதன் மூன்றாவது கட்டமாக 'பெவ்டா' என்ற மது அருந்த அனைவருக்கும் அனுமதியளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இது, குறைந்த போதை உள்ள மதுவாம்!

காந்தியார் நூற்றுண்டு விழா நிகழ்ச்சிகள்

மாநில முதலமைச்சர்கள் திட்டம் வகுப்பர்

நாகபுரி, ஜூலை 14—

காந்தியார் நூற்றுண்டு விழா நிகழ்ச்சிகளை இறுதியாக்குவதற்காகத் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய்—மாநில முதலமைச்சர்கள் ஜூலை 28, 29-ம் நாட்களில் சேவா கிராமத்தில் கூடுவர்.

பி.யு.சி. வகுப்புக்கு தமிழில் விஞ்ஞான பாடப் புத்தகங்கள்

'தயாராகி விட்டன'--- கல்வி அமைச்சர் தகவல்

சென்னை, ஜூலை 12—

"கல்லூரி புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்கப் புத்தகங்கள் தயாராகிவிட்டன"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"பி.யு.சி. வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களைத் தமிழிலேயே சொல்லித் தருவதற்கு வசதியாக 12 புத்தகங்கள் அச்சாகிவிட்டன. இன்னும் ஒரு புத்தகம் இந்த மாதத்திற்குள் முடிந்துவிடும்.

இவை இப்பொழுதே கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டுவருகின்றன. இந்தப் புத்தகங்களை முறைப்படி வெளியிடும் விழா ஒன்றை விரைவில் நடத்த எண்ணியுள்ளோம்.

மாணவர்க்கு ஏற்பாடுகள்

பட்டப் படிப்பைத் தமிழில் படிக்க மாணவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

கல்லூரிகளில் சிலருக்கு (பி.ஏ.) இளங் கலை வகுப்புகளில் இடம் இல்லையென்று புகார் வரும் பொழுது வகுப்புகளை அதிகரிக்கவோ அல்லது மாணவர்களுக்கான இடத்தின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இடம் காலியாக இருக்கும் கல்லூரிகளுக்குப் போய்ச் சேரும்படி மாணவர்களுக்கு அறிவுரை கூறப்படுகிறது."

நாடாளுமன்ற கூட்டம்

ஜூலை 22-ம் நாள் தொடங்கும்

பரபரப்பான விவாதம் நடைபெறக்கூடும்

புதுடில்லி, ஜூலை 13—

நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடர், ஜூலை 22-ம் நாள் தொடங்குகிறது. இந்தக் கூட்டம் ஒரு திங்கள் வரையில் நடைபெறக்கூடும்.

பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்வதென சோவியத் இரஷ்யா செய்துள்ள முடிவின்மீது இந்தக் கூட்டத் தொடரில், பரபரப்பான விவாதம் நடைபெறும்.

சித்தாத்தூர் தி. மு. க.

க. அன்பழகன் துவக்கிவைத்தார்

10—7—68 மாலை 6-30 மணிக்கு சித்தாத்தூர் தி. மு. க. துவக்க விழா தோழர் முத்தையன் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ.,எம்.பி. அவர்கள், கிளைக் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், கழகம் 18 ஆண்டுகளாக நாட்டிற்குச் செய்துள்ள நன்மைகளை எடுத்துரைத்தார்; 'தமிழ் மக்கள் அனைவரும் கழகத்தையே ஆதரிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் கண்டாச்சிபுரம் தி. மு. க. செயலாளர் இர. சுப்பிரமணியமும் பேசினர்.

'கழக ஆட்சி நீடிக்க வேண்டும்'

அண்ணாவுக்குப் பொன்னாடை போர்த்தி பெரியார் வாழ்த்து

அரூர், ஜூலை 15—

" தமிழர்களுக்கு இதுநாள்வரையில் கிடைக்காத ஆட்சி இப்போது கிடைத்திருக்கிறது; இது, தமிழர் ஆட்சி; கலப்படமில்லாத — சுத்தமான தமிழர் ஆட்சி; முன்பு இருந்த ஆட்சியெல்லாம் கலப்பட ஆட்சிதான்!

" தமிழர் நலனுக்காகத் தி. மு. க. ஆட்சி நீடிக்கவேண்டும்; இந்த ஆட்சிக்கு ஆபத்து வராமல் காக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும்"

என்று திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அரூர் பஸ் நிலையத் திடலில் பெரியார் பிறந்தநாள் விழா நடைபெற்றது; அவ்விழாவில் பெரியார் அவர்களும் கலந்து கொண்டு, அண்ணா அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டுரையாற்றுகையில் கூறியதாவது :—

" காங்கிரசு ஆட்சி வடநாட்டின் ஆட்சி — வடநாட்டின் சொத்தாக ஆன ஆட்சி; அது நமக்குத் தேவையற்றது!

" தி. மு. கழகத்தினர் என்னைவிட்டுப் பிரிந்துபோனவர்கள் என்று குறிப்பிட்டார்கள்; அது தவறு; அவர்கள் பிரிந்து போகவில்லை — நான்தான் பிரிந்து போனேன்!

" சில தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்கள் — சூழ்நிலை காரணமாக அவரவர்களுக்கு ஏற்பட்ட நிலையால் அப்படி ஒரு நிலை ஏற்பட்டது.

" இன்று இந்த ஆட்சி தமிழர்களுக்கு நன்மை செய்யும் ஆட்சி; இதை நாம் விழிப்புடனிருந்து காப்பாற்றவேண்டும்.

" சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்ப என்னுடன் அண்ணா அவர்கள் துணையாக இருந்து, அவரது பேச்சு வலிமையாலும், செயலாற்றலாலும் அதனை வளர்த்தார்!"

திருத்தணி தி.மு.க. கிளைத் தேர்தல்

செங்கற்பட்டு மாவட்டம் திருத்தணி தி. மு. க. கிளைத் தேர்தல் 25—7—68 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மாநில வீட்டு வசதி வாரியம்

ஒப்பந்த அறிவிப்பு

Ref. No. 1671/68-PH.

கீழ்க்காணும் வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் 7—8—68 மாலை 3 மணிக்கு மேற்படாமல், கீழே கையெழுத்திட்டுள்ளவருக்கு வந்துசேரும் வகையில் வரவேற்கப்படுகின்றன. மேலுறையில் வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் சரியாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4 மணிக்கு நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வேலையின் பெயர் : தென் சென்னை புறநகர்ப் பகுதி II-ல் கழிவு நீர் இறைவை நிலையம் (Sewage Pumping Station) கட்டுதல்.

வேலையின் தோராயமான மதிப்பு : ரூ. 84,000

பொறுப்புத் தொகை : ரூ. 1,260

ஒப்பந்த வகை : முழுத் தொகை

ஒப்பந்த விவர அறிக்கைகளின் விலை : ரூ. 10-ம் விற்பனை வரியும் (திரும்பத் தரப் படமாட்டாது)

ஒப்பந்த விவர அறிக்கைகளை மாநில வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகப் பொறியர் (பொதுச் சுகாதாரம்) அலுவலகத்திலிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒ-ம்) எல்.ஜே. மார்த்தாண்டம்
நிர்வாகப் பொறியர்
(பொதுச் சுகாதாரம்)

36, மவுண்ட்ரோடு
சென்னை-35
நாள் : 11—7—68

அரக்கோணம் நகர தி. மு. க. தேர்தல்

" 17-7-68 அன்று நடைபெறவிருந்த அரக்கோணம் நகரக் கிளைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று தலைமைக் கழகத்தைக் கேட்டு அனுமதி பெற்று, அதற்கேற்ப ஒத்திவைக்கப்படுகிறது.

" தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

என்று வ. ஆ மாவட்டச் செயலாளர் இரா. தருமலிங்கம் அறிவிக்கிறார்.

திருப்பூர் நகர 18-வதுவார்டு கிளை மறு தேர்தல்

திருப்பூர் நகர உட்கிளை (வார்டு கிளை)கள் தேர்தல் சிலவற்றைப் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனைகள் குறித்து நேரில் விசாரணை நடத்திய தலைமைக் கழகப் பிரதிநிதி தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. அவர்கள் அறிக்கைக்கேற்ப,

திருப்பூர் நகர 18-வது (பழைய 10-வது) வார்டு உட்கிளையின் செயலாளர், பொருளாளர் ஆகிய இரு பொறுப்புகளுக்கு மட்டும், 17-7-68 காலை 10-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கோவை நகர 4, 22-வது வார்டு உட்கிளைகள் தேர்தல்

கோவை நகர உட்கிளை (வார்டு கிளை)களின் தேர்தல்கள் சிலவற்றில் எழுப்பப்பட்ட ஆட்சேபணை — முறைமீடுகளை, ஆணையாளர் தோழர் நீல நாராயணன் அவர்கள் அறிக்கையின் அடிப்படையில் தலைமைக் கழகம் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப,

கோவை நகர 4-வது வார்டு உட்கிளையில் எல்லா பொறுப்புகளுக்குமான தேர்தல்களும்;

22-வது வார்டு கிளையின் அவைத் தலைவர் பொறுப்புக்கு ஆன தேர்தலும்;

21—7—68 ஞாயிறு காலை 10-மணிக்கு அந்த வார்டைச் சார்ந்த இடத்தில் நடைபெறும்.

தலைமைக் கழகச் சார்பில் பொதுக்குழு உறுப்பினர் கோ. செங்குட்டுவன் அவர்கள் ஆணையாளராக இருந்து தேர்தல்களை நடத்திவைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

'விருது' பெற்றவர்கள் பற்றிய விளக்கம்

சென்னை, ஜூலை 14—

பாரத் ரத்னா—பத்ம விபூஷன்—பத்ம பூஷன்—பத்மஸ்ரீ ஆகிய சிவிலியன் விருதுகள் பெற்றவர்கள் அவற்றைக் கடிதங்களிலும், அழைப்பிதழ்களிலும், புத்தகங்கள் — சுவரொட்டிகள் போன்றவற்றிலும் பட்டங்கள்போல் பயன்படுத்துவதாக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த விருதுகள், பட்டங்கள் அல்ல; தனி நபர்களின் பெயர்களுடன் அவற்றைப் பயன்படுத்து அரசியல் சட்டத்திற்கு முரணானதாகும்.

அரசியல் சட்டம் பட்டங்களை ஒழித்துள்ளது; எனவே, இந்த விருதுகள் பெற்றவர்கள் அவற்றைத் தங்களது பெயருக்கு முன்போ, பின்போ பட்டங்களைப் போல் பயன்படுத்தாமல் இருப்பது விரும்பத்தக்கதாகும். அவ்வப்பொழுது பத்திரிகைக் குறிப்புக்கள் மூலம் ஏற்கனவே இது தெளிவுபடுத்தப்பட்டு வந்துள்ளது.

மத்திய அரசு, செய்தி வெளியீடு ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சென்னைவாசிகள் கவனிக்க :

வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா?

இல்லையேல் ஜூலை 27-ஆம் நாளுக்குள் மனுச் செய்க!

சென்னையில் உள்ள 120 மாநகராட்சி வட்டங்களுக்குமான வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் இரண்டு இடங்களில், பொதுமக்கள் பார்வையிடுவதற்காக, பட்டியலின் நகல் வைக்கப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகையிலும் வைக்கப்பட்டுள்ளது. அலுவலக வேலை நேரங்களில் பொதுமக்கள் பார்வையிடலாம்.

இப்பட்டியலில் விடுபட்டுப்போன பெயர்களைச் சேர்க்கவோ, திருத்தங்கள் செய்யவோ, ஆட்சேபம் எழுப்பவோ, அதனதற்குரிய பாரங்களைக் கொண்டு ஜூலை 27-ஆம் நாளுக்குள் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :—'டி. ஆர். இராசகோபாலன், தேர்தல் பதிவு அதிகாரி—வருவாய்த் துறை அதிகாரி, மாநகராட்சி மன்றம், ரிப்பன் கட்டிடம் சென்னை-3.'

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், தவறாது வாக்காளர் பட்டியலைப் பார்வையிட்டு, சேர்க்க வேண்டிய வாக்காளர்களைச் சேர்க்கவும், பிழையிருந்தால் திருத்தவும் ஆவன செய்வது இன்றியமையாக் கடமையாகும்.

காரமடை தி.மு.க. கிளைத் தேர்தல்

கோவை மாவட்டம் காரமடை தி. மு. க. கிளையின் மறுதேர்தல், ஏற்கனவே அறிவிக்கப்பட்டதையொட்டி, 20-7-68 காலை 10 மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர். கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

ஆலந்தூர் நகர வார்டு கிளைகளின் மறு தேர்தல்

ஆலந்தூர் நகரத்தின் 13, 14, 17, 18 ஆகிய நான்கு வார்டுகள் உட்கிளைகளுக்கான தேர்தல்கள் 21-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இடங்களின் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க)

கலவை, கலசப்பாக்கம் தி. மு. க. கிளைகளின் மறு தேர்தல்

வ. ஆ மாவட்டம் கலவை, கலசப்பாக்கம் கிளைகளின் மறு தேர்தல், ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதற்கேற்ப 17—7—68 அன்று கலவைத் தி. மு. க. தேர்தல் காலை 10-மணிக்கும்; கலசபாக்கம் கிளைத் தேர்தல் மாலை 4-மணிக்கும் மாவட்டச் செயலாளர் சார்பான ஆணையாளர் தோழர் எம். எஸ். இராதாகிருஷ்ணன் (செங்கம் வட்டச் செயலாளர்) அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கருநாடகத்தில் கழக வளர்ச்சி

அறிஞர் அண்ணா கருத்து

பெங்களூர், ஜூலை 13—

" தமிழகத்தில் உள்ள தி.மு. கழகத்தின் விரிவுபடுத்தப்பட்ட கிளைபோல், கருநாடகத்தில் உள்ள தி.மு. கழகம் விளங்குவதில் பயனில்லை; கன்னடம் பேசும் மக்களை மேலும் மேலும் இங்கு கழகத்தில் சேர்க்க வேண்டும்; இப்பகுதியில் கழகம் வேரூன்ற வேண்டும் "

என்று அறிஞர் அண்ணா அவர்கள் கருத்தறிவித்தார்கள்.

பெங்களூருக்கு வந்திருந்த அறிஞர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் மேலும் கூறியதாவது :—

" கருநாடகத்தில் கழகம் வேரூன்றுவது நன்மை தரத்தக்கதேயாகும். இங்குள்ள கழகத் தோழர்கள் இந்த மாநிலத்தில்தான் கொள்கைகளில் அக்கறை செலுத்த வேண்டும். இந்த மாநிலத்தின் பிரச்சினைகளோடு—எதிர்கால ஆசைகளோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்."

அதிகப் பளுவை உயரே தூக்கும் புதிய இயந்திரம் ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிரம்பப் பளுவைத் தூக்குவதுடன் அதிக உயரத்திற்குத் தூக்கும் சிறப்புடையது இந்த இயந்திரம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

16--7--68

வந்தவாசி

நகர தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றி விழாவும், வட்டச் செயலாளர் எஸ். கே. ரெசாக்குக்குப் பாராட்டு விழாவும்; மாலை 5-மணிக்கு தர்மராசா கோயில் திடலில்; தலைவர் : ஆர். வேணுகோபால்; பேசுவோர் : ப. உ. சண்முகம் எம்.எல்.சி., கோ. விசுவநாதன் எம்.பி., வி. டி. அண்ணாமலை ம்.எல்.ஏ. முத்துலிங்கம் எம்.எல்.ஏ., ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ., அமுதாராகவன், டி. ஏ. எஸ். பாலன், எஸ். பக்கிரி, எம். கே. ஏழுமலை, வி. என். மார்க் மற்றும் வட்டச் செயலாளர்கள். (மாலை 4-மணிக்கு, மும்முனியிலிருந்து நடராசன் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

தென்னவனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர் : இராமு ; பேசுவோர் : டி. கே. சிறைமீட்டான் எம்.எல்.ஏ., தமிழ்க்குடிமகன், நா. நாகலிங்கம், சுப. தங்கவேலன், அ. வே, அரவரசன், ச. பெருவழுதி.

சென்னை 10-வது வட்டம்

முத்தமிழ் முன்னேற்ற மன்ற 4-ஆம் ஆண்டு விழா; இரவு 7-மணிக்கு வண்ணை கிழக்குக் கல்லறைச் சாலையில்; தலைவர் : வி. பி. சாரதி; பேசுவோர் : கி. மனோகரன் எம்.பி. சிட்டிபாபு எம்.பி., மு. வேதாசலம் எம்.எல் ஏ., த. வெங்கடேசன் எம்.சி., ந. இராசமன்னார், பி. ஏ. என். இராசரத்தினம், டி. எஸ். வேலன், ப. வடிவழகன், மு. கணேசன், இல. இராமதாசு, பூ. செல்வம்.

கடலூர்

7-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு அக்கரை கோரியில்; தலைவர் : கே. எம். வேலு ; பேசுவோர் : இர. இளம் வழுதி எம்.எல்.ஏ., கி. கோவிந்தராசன், கி. தண்டபாணி எம்.சி., கே. ஜி. சாமிநாதன் எம்.சி.

சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

17--7--68

சென்னை 4-வது வட்டம்

நாவலர் படிப்பக 11-ஆம் ஆண்டுவிழாவும், தென்காசி வெற்றிவிழாவும்; மாலை 7 மணிக்கு வண்ணை சஞ்சீவிராயன் கோயில் தெருவில்; தலைவர்: பி. கே. மூர்த்தி; பேசுவோர் : எம். ஆர். ஆர் வாசு, மு. வேதாசலம் எம்.எல் ஏ., என். வி. என். சோமு, கஸ்தூரி, சற்குணம், கண்ணபிரான், பாலன், குப்பன்.

காட்டேரிகுப்பம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மந்தைவெளித்திடலில்; தலைவர் : எம். கதிர்வேலு ; பேசுவோர் : எம். ஏ. சண்முகம், சு. ம. சுப்பராயன், சா. இலக்குமணன், சோலையப்பர்.

முருகுபாண்டியனின் பலகுரல் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

புதுவை எம். ஏ. சண்முகம்

சுற்றுப்பயணம்

ஜூலை 17 : காட்டேரி குப்பம்; 20: அபிஷேக பாக்கம்; 21 : ஒதியம்பட்டு; 22: கணபதி செட்டிகுளம்; 23 : பாகூர்; 24 : பண்டசோழநல்லூர்; 26 : வில்லியனூர்; 27 : புதுவை; 29 : குருவிநத்தம்; 30 : அன்னியாங்குப்பம் (கிருஷ்ணாபுரம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.